| Publication : **Dinamani** | | Language : **Tamil** |
|---|---|---|
| Date : **21-10-09** | Page No : **12** | Edition : **Chennai** |
| Headline : **American Company Plans Power Plant at Tuticorin** | | |

# தூத்துக்குடியில் சூழல் காக்கும் மின்நிலையம்: அமெரிக்க நிறுவனம் திட்டம்

**சென்னை, அக். 20:** அமெரிக்காவைச் சேர்ந்த கிளீனர்ஜன் கார்ப்பரேஷன் நிறுவனத்தின் துணை நிறுவனம் தமிழகம், கர்நாடகத்தில் இரண்டு மின்னுற்பத்தி நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்காக இந்நிறுவனம் ரூ. 1,135 கோடி முதலீடு செய்ய உள்ளதாக நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி மார்க் குயின் தெரிவித்தார்.

தமிழகத்தில் தூத்துக்குடியில் 16 மெகாவாட் மின்னுற்பத்தி நிலையத்தையும், கர்நாடக மாநிலத்தில் 64 மெகாவாட் மின் நிலையத்தையும் அமைக்க உள்ளது.

அனல் மின் நிலையம், நீர் மின் நிலையம் மற்றும் அணுமின் நிலையம் போல் அல்லாமல் இந்நிறுவனம் வாயுமயப்படுத்துதல் எனும் புதிய தொழில் நுட்பம் மூலம் செயல்படும் மின் நிலையங்களை அமைக்க உள்ளது.

சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு இல்லாத மின்னுற்பத்தி நிலையத்தை தூத்துக்குடியில் இந்நிறுவனம் அமைக்கிறது. 'பையிரோலைசிஸ் கேசிஃபிகேஷன்' எனும் வாயு மயப்படுத்தல் தொழில் நுட்பம் மூலம் செயல்படுபவையாகும்.

இந்த மின் நிலையங்களுக்கு 'பீமா பாம்பூ' எனப்படும் மூங்கில் வகைகளையும் பவுலோனியா எனும் மரத்தையும் பயிரிட முடிவு செய்துள்ளது. இவ்விரு தாவரங்களும் அதிக உயிர்த்திரள் (பயோமாஸ்) கொண்டதால் அதன் மூலம் கிடைக்கும் சக்தியில் மின் நிலையத்தைச் செயல்படுத்த முடியும்.

பீமா பாம்பூ புல்வகை ஒரு ஏக்கருக்கு 60 டன் வரையில் விளையும். அத்துடன் 50 ஆண்டுகள் வரை தொடர்ந்து விளைச்சல் தரக்கூடியது. இதேபோல பவுலோனியா மரவகை 9 ஆண்டுகள் வரை தொடர்ந்து உயிர்ப்பித்துக் கொள்ளும் ஆற்றல் கொண்டது. இந்த இரண்டு தாவரங்களிலும் அனல் மின்சார தன்மைகள் மற்றும் வாயுமயப்படுத்தும் திறன் அதிகம் உள்ளது

இவ்விரு தாவரங்களிலிருந்தும் கிடைக்கும் உயிர்த்திரள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். இந்த பயிர்களை விளைவிக்க அதிக நிலங்களைக் கையகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் 800 ஏக்கர் நிலம் நீண்டகால அடிப்படையில் கையகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 4,000 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்விரு திட்டத்துக்குத் தேவைப்படும் மொத்த நிதியில் ரூ. 397 கோடியை கிளீனர்ஜன் நிறுவனம் முதலீடு செய்யும். பங்குச் சந்தை மூலம் ரூ. 312 கோடி திரட்ட முடிவு செய்துள்ளது. நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிடமிருந்து ரூ. 738 கோடியை நீண்ட காலக் கடனாகப் பெற உள்ளது என்றார் மார்க் குயின்.